மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் தொழிலாளர்களுக்கு கடன் கிடைப்பதற்கு மாதாமாதம் கண்காணிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மாதாமாதம் கண்காணிப்பது என்பது பெரிய வேலையாகப் போய்விடும். இதற்கென்று தனிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது. நம்முடைய அதிகாரிகளுக்கு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறோம். இண்டஸ்டிரீஸ் இலாகா, ரெவின்யூ இலாகா, பஞ்சாயத்து இலாகா ஆகிய மூன்றும் சேர்ந்து அந்த அதிகாரி இடத்தில் ஒரு ஏற்பாடு செய்து கொண்டு, அந்த அதிகாரிகள் குறிப்பிட்ட பகுதியைப் பார்வையிட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, அந்த அந்தப் பகுதிகளில் இருக்கிற அதிகாரிகள் கண்காணிக்கலாம். கண்காணித்து இப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைக்க வகை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Yarns for fishing nets.

* 237 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that depots have been opened in Tamil Nadu by the Fisheries Department for the supply of yarn to Fishermen for fishing nets; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) இல்லை.

(இ) எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இந்த நைலான் நூல் எங்கே இருந்து வாங்கப்படுகிறது? விலைக்கு வாங்கி சப்ளை செய்யப்படுகிறதா? இன்னும் அதிகப்படியாக வாவலைப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, இந்த நூல் தயார் செய்யப்படுகிற இடம் பம்பாயை அடுத்துள்ள பகுதி. அங்கே உள்ள 'மெசர்ஸ் கார்லான் நைலான்'

1975 நவம்பர் 7]

என்ற நிறுவனம் இந்த நைலான் நூலைத் தயார் செய்கிறது. நம்முடைய தேவை அதிகமாக இருக்கிறது. நமக்கு வேண்டிய அளவிற்கு நைலான் நூல் கிடைக்கவில்லை. அவர்களிடத்திலே இருந்து இன்னும் அதிகமான அளவிற்கு இதைப் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் நமக்கு வேண்டிய அளவிற்கு சப்ளை செய்ய முடியாததற்குக் காரணம் நூல் பற்றாக் குறை. எனவே வருகின்ற காலங்களில் இந்த நூல் பற்றாக் குறையைத் தவிர்ப்பதற்கும், புதிய வகை நைலான் நூலைக் கண்டுபிடிப்பதற்கும் மீனள மேம்பாட்டுக் கழகம் வழிவகைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது என்பதைத் தெரியப் படுத்திக் கொள்கிறேன்.

திரு. க. உசொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது நைலான் நூல் கிடைக்கவில்லை, பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னார்கள். இப்படிப் பற்றாக்குறை இருக்கின்றபோது கிடைக்கின்ற நைலான் நூல் உண்மையிலேயே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மீனவர்களுக்கு ஒழுங்காகக் கிடைப் பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அட்டைகள் கொடுத்திருக் கிறார்கள். அதேபோல மீனவர்களுக்கும் நைலான் நூல் கிடைப் பதற்கு அட்டை கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதற்கு அட்டை கொடுத்து இருக்கிறார்கள். அதைப் போன்று நைலான் நூல் வாங்கிக் கொள்வதற்கு உதவியாக அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. இதில் சில குறை பாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றைப் போக்க இந்த மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் இந்த நூலைக் கொள்முதல் செய்து மீனவர்களுக்கு வழங்கலாமா என்பது யோசனை அளவில் இன்றைக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.